*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.உதயகுமார் த/பெ. ராஜரத்தினம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29.07.2026.**

துவக்க நேரம் 04.14 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி (அன்பரசன்) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் மல்லியகரை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்பொழுது பணிஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். கடந்த 22.05.2022ம் தேதி மதியம் 12.30 மணிக்கு மல்லியகரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலையப் பொறுப்பிலிருந்தபோது நிலையம் ஆஜராகி கீரிப்பட்டியை சேர்ந்த ராமகோவிந்தன் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று, அதன் தன்மைக்கேற்ப எதிரியின் மீது குற்ற எண்.47/2022 சட்ட பிரிவுகள் 323 r/w 511 and 506(1) இ.த.ச. ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2) பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, அன்றைய தினமே மதியம் 01.30 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் சண்முகசுந்தரம் மற்றும் அண்ணாமலை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்படி சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்களை அன்றைய தினமே தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கு பதிவு செய்த பிரிவுகளான 323 r/w 511 and 506(1) இ.த.ச–லிருந்து 352, 506(1) இ.த.ச– வாக மாற்றி சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடிவந்த நிலையில், அவர், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று வெளியில் சென்றது தெரியவந்ததால் அவரை கைது செய்யவில்லை.

4) அதன் பிறகு கடந்த 07.07.2022 ம் தேதி இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து சட்டப்பிரிவுகள் 352, 506(1) இ.த.ச – ன் கீழ் எதிரிக்கெதிராக குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கு புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில், "காவல் நிலையத்திற்கு உள்ளே வைத்து சம்பவம் நடந்ததாக" புகார்தாரர் சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். இவ்வழக்கு எதிரியின் மீது இந்த வழக்கு மட்டுமல்லாமல், இன்னும் இரண்டு வழக்குகள் அடுத்தடுத்து நானே பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2) எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்ற விவரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இவ்வழக்கு பதிவு செய்த சமயம் அவ்வாறு உரிமையியல் வழக்கு எதுவும் இல்லை, இவ்வழக்கு பதிவு செய்த பின்னிட்டு அவர் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ததாக கேட்டு தெரிந்துகொண்டேன்.

3) இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றால் வழக்கு பதிவு செய்த அன்றே முதல் தகவல் அறிக்கையை அன்றைய தினம் மதியம் 02.00

மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துவிட்டேன். வழக்கு பட்டியல் சாட்சிகளை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் அன்றைய தினமே மதியம் 01.30 மணியளவில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) எத்தனை மணிக்கு பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றால் 01.30 மணிக்கு பார்வை மகஜர் தயார் செய்துவிட்டு, அதனை தொடர்ந்து சாட்சிகளை விசாரித்தேன். புகார்தாரர் கொடுத்த மறுவாக்குமூலத்தில், வழக்கு சம்பவம் எந்த இடத்தில் நடைபெற்றுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, காவல் நிலையத்திற்கு அருகில் என்று சொல்லியுள்ளார்.

5) நான் தயாரித்த பார்வை மகஜரில் வழக்கு சம்பவம் நடைபெற்ற இடம் என்று எவ்வாறு குறிப்பிட்டு சொன்னேன் என்றால் அ.சா.1 வழக்கு சம்பவம் நடைபெற்ற இடத்தை என்னிடம் காண்பித்தார், அதன் பேரில் நான் வழக்கு சம்பவயிடத்தை குறிப்பிட்டு பார்வை மகஜர் தயார் செய்தேன்.

6) வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், நான் அவசரகதியில் ஆவணங்களை தயாரித்து எதிரிக்கெதிரான குற்ற வழக்கு தொடர்பாக சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிக்கெதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை நான் சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல், வழக்கு ஆவணங்களை சரிவர பரிசீலிக்காமல், எதிரிக்கெதிராக இக்குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அவ்வாறு சரிவர புலன் விசாரணை செய்திருந்தால் இக்குற்ற வழக்கில் எதிரிக்கெதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல.

7) இவ்வழக்கு புகாரை 12.30 மணிக்கு பெற்று, 01.30 மணிக்குள் வழக்கு விசாரணையை தொடங்கி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்க முடியாது என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல்

காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பதால்தான் அவசரகதியில் இவ்வழக்கு ஆவணங்களை உருவாக்கி எதிரிக்கெதிராக குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, வழக்கு சம்பவம் காவல் நிலையத்திற்கு அருகில் நடைபெற்றதால் இவ்வழக்கு புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன், விசாரணையை உடனடியாக துவங்கி, சாட்சிகளை சரிவர விசாரணை செய்து, ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க முடிந்தது. எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.43 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.29 18:20:43 +0530

Judicial Magistrate No.2, Attur.